# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௪] யாழ்ப்பாணம்:- நந்தன வருஷ மார்கழி மீ ௧௦ உ வெள்ளிக்கிழமை (26 Dec. 1952) [இல-௭௧]


# நன்னெறிதழுவித் தீயவை விலக்கல்

## உலகம் உய்வதற்கு உகந்த வழி

திருவள்ளுவர் ஒழுக்கத்தை மிக முக்கியமாகக் கருதினர் என்பதற்கு வேறோர் சான்றும் திருக்குறளில் காணப்படுகின்றது. இறைவனை அடைதற்கு சிலர் அன்பு நெறியை மேற்கொண்டு 'அன்பே கடவுள்' (God is Love) என்று கூறுவர். மகாத்மா காந்தி உண்மை நெறியைப் போற்றி 'உண்மையே கடவுள்' (God is truth) என்றார். திருவள்ளுவரோ ஒழுக்க நெறியை வற்புறுத்தி இறைவனை அடைவதற்கு அதுவே மார்க்கம் என்று கூறுகிறார்.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

என்ற குறளில் இறைவனை ஐம்பொறிகளின் அவாவை அடக்கிய ஒழுக்கமூர்த்தி என்றும், அவரது நெறி குற்றத்தின் நீங்கிய ஒழுக்கநெறி என்றும், அந்நெறியில் வழுவாது நிற்பவர்கள் வீட்டுலகை அடைவார்கள் என்றும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

### ஒழுக்கத்தை வற்புறுத்தும் முறை

#### தெய்வ நம்பிக்கை

ஒழுக்கத்தை ஆன்றோர்கள் எங்ஙனம் வற்புறுத்தியுள்ளார்கள்? அரசியலார் ஒழுக்கத்தை வற்புறுத்துவதற்கு தண்டனைகளைக் கையாளுகின்றனர். ஆனால் அறநூல்கள் கூறும் முறையோ வேறானது. அவை இறை நம்பிக்கை அல்லது மதத்தின் அடிப்படையில ஒழுக்கத்தை வற்புறுத்துகின்றன. எங்கும் நிறைந்து எல்லாம் வல்ல இறைவன் மக்களின் நல்லொழுக்கத்திற்கு வெகுமதியாக இம்மையில் இன்பத்தையும் மறுமையில் மோட்சத்தையும் அளிக்கிறான் என்றும், தீய ஒழுக்கத்திற்குத் தண்டனையாக இம்மையில துன்பத்தையும் மறுமையில் நரகம், பிறப்பு முதலியவற்றையும் அளிக்கிறான் என்றும் கூறுகின்றன வள்ளுவரும்,

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

என்று கூறி சொர்க்கம் நரகம் என்பனவற்றின் அடிப்படையில் அடக்கத்தை வற்புறுத்துகின்றார்.

#### மனச்சாட்சி

இரண்டாவது மனச்சாட்சியின் அடிப்படையில ஒழுக்க நெறிகளை வற்புறுத்துவதாகும். மனச்சாட்சியை நம்மைச் சீர்ப்படுத்துவதற்காக நம் உள்ளத்திற்குள்ளிருந்து பேசும் தெய்வக்குரலென்று கூறலாம். நாம் ஒரு கருமத்தைச் செய்ய முற்படும்போது மனச்சாட்சி அது செய்யத் தகுவது அல்லது தகாதது என்று தீர்ப்பளித்து நம்மை எச்சரிக்கை செய்கிறது. வள்ளுவரும,

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

என்று கூறுகின்றார். ஒருவன் மனமாரப் பொய் சொல்வானுல் அவன் மனமே அப்பாபத்திற்குச் சாட்சியாக நின்று அதன் பயனாகிய துன்பத்தை அடைவிக்கும் என்பது இதன் பொருள்.

#### பொதுமக்கள் ஆதரவு

மூன்றாவதாகப் பொது மக்கள ஆதரவு என்ற அடிப்படையில் ஒழுக்கத்தை ஆன்றோர்கள் வற்புறுத்தியுள்ளார்கள்: பொதுசன அங்கீகாரம் மிகுந்த சக்தியுடையது. பலரும் தம் சொந்த உணர்ச்சி வேறாக இருந்தாலும் பொதுசன அங்கீகாரத்திற்கு மதிப்பு வைத்து அதற்கு உட்பட்டே காரியம செய்வர். திருவள்ளுவர்,

உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

என்றும்,

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்

என்றும் உலகப் பொதுமக்களால் அங்கீகரிக்கப்படும ஒழுக்க முறைகளையே மக்கள மேற்கொள்ள வேண்டுமென்று கூறுகின்றார்.

இப்பொதுசன அங்கீகாரம் நாட்டுக்கு நாடு காலத்துக்குக் காலம் வேறுபடுகிறது. மேனாடுகளிலே மணப்பருவமெய்திய மங்கை ஆடவரோடு கலந்து பழகி உறவாடுதலை அங்குள்ள பொது மக்கள் அங்கீகரிக்கின்றனர். ஆனால் நமது நாட்டில் பொதுமக்கள் கருத்து அதற்கு எதிராக உள்ளது. இன்னும் நமது நாட்டிலே இறந்த கணவனோடு மனைவி உடன்கட்டை ஏறுவதை மாதர் ஒழுக்கமாகச் சில நூற்றாண்டுகளுக்கு முன் வரையிலும மக்கள் கருதி வந்தனர். ஆனால் இன்றோ அதை ஒரு பாவச் செயலாகநாம் எண்ணுகிறோம்.

#### ஒழுக்கத்தாலுண்டாகும நன்மைகள்

ஒழுக்கத்தாலுண்டாகும நன்மைகள் பலவாம். நல்லொழுக்கத்தால் மக்களின் உள்ளம் தூய்மை அடைந்து, உடலும் வலுப்பெறுகிறது. ஒழுக்கத்தைப் பேணுக ஒரு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளே...!

திருச்சிற்றம்பலம்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.

# காந்தீயசங்க நிவாரணத்தொண்டு

## வகுக்கப் பெற்ற திட்டம்

சென்ற 14-12-52 ல் நீர்வேலியில் உள்ள சர்வோதய ஆச்சிரமத்தில் அகில இலங்கைக் காந்த்ய சேவாசங்க நிர்வாக சபையின் அவசிய கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு ஸ்ரீமதி மா. மங்களம்மாள் தலைமை வகித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 30-11-52-ல் வீசிய பெரும் புயலினுல் ஏற்பட்ட சேதங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. அரசாங்கமூலம் நடைபெறும் புயல் நிவாரண வேலைபற்றி நிர்வாகசபை அதிருப்திப்பட்டது. வடமாகாண அதிபருக்கு ஒரு விளக்கமான கடிதம அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது. அரசாங்க நிவாரணத்தைச் சரியாகப் பெறுவதற்காகக் கிராமங்கள் தோறும் பகிரங்கக்கூட்டங்கள் நடாத்துவதென ஒப்புக்கொள்ளப்பட்டது.

நிவாரண வேலைகளைக் கிராமாதிகாரிகளிடம் விட்டால் ஊழல்கள் பட்சபாதங்கள் ஏற்படுமென நிர்வாகசபை சுட்டிக்காட்டிக் கிராமங்கள்தோறும உள்ள சனசமூக நிலையங்கள் கிராம முன்னேற்றச் சங்கங்களின் ஆலோசனை உதவியுடன் அரசாங்க நிவாரண வேலைகளைச் செய்ய வேண்டும் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் நிவாரண வேலைகளில் உள்ள ஊழல்களையும் தவறுகளையும் சங்கம கண்காணிப்பதென்றும் தேர்தல் தொகுதிகள்தோறும் பிரதான ஊழியர்களை நியமித்து அவர்கள்மூலம் கிராமங்கள்தோறும கிராம ஊழியர்களை நியமித்து நிவாரண உதவிகளைக் கண்காணிப்பதெனவும், ஊழல்கள் தவறுகளைக் கண்டுபிடித்து விசாரணைக்கெடுப்பதென்றும் நிர்வாகசபை தீர்மானித்தது.

புயல் சேதங்களினுல் பெரும்பாலும விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். மீண்டும் விவசாயிகள் விவசாயப் பலனைப் பெறுவதற்கு ஒருவருடகாலமாகும். இத்தகையநிலையில் சில கிராமங்களில் பஞ்சம் ஏற்படுமென நிர்வாகசபை நம்புகின்றது. எல்லாவற்றிற்குமாக சங்கம் "விவசாயிகள் உதவி நிவாரணநிதி" ஒன்றை ஆரம்பிப்பதென்றும் ஒரு வருடத்திற்கு நிவாரணவேலை செய்வதென்றும தீர்மானிக்கப்பட்டது. பஞ்சம் ஏற்படவிருப்பதால் விவசாயிகள் ஒருவருடத்துக்காவது பேரப் பொருட்களை உற்பத்தி செய்வதை விடுத்து, சிறு தானியம் கிழங்குகைகளை உற்பத்தி செய்யுமாறு விவசாயிகளுக்கு ஆலோசனை கூறும் வேண்டுகோள் அச்சிட்டு விநியோகிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் புயலினுல் ஏற்பட்ட சேதங்களை 5 மந்திரிமார் வந்துபார்த்தும் நிவாரண வேலைகள் சரியாக நடைபெறவில்லை. இலங்கைப் பிரதம மந்திரியார் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்து புயற் சேதங்களைப் பார்த்து மக்களின் துன்பத்தில் பங்குகொள்ள வேண்டுமென்றும் போதிய நிதி திரட்டி நிவாரணம் அளிப்பதற்காக பிரதமர் "யாழ்ப்பாண புயல் நிவாரண நிதி" ஒன்றை

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

அரசியல் அரங்கு

# ஆரம்பமானவேலைத்திட்டங்கள்

## அவையுமா நிறுத்தப்படுகின்றன?

### வடமராட்சி நன்னீர வாவி வருமா?

அரசாங்கங்களுக்கு அல்லல் வருவது வழக்கம். பண நெருக்கடி நிகழ்வது சகசம். ஆனால் இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியும் வந்துவிட்டால் எல்லாம் அப்படியே நின்றுவிடுகின்றன.

கடலேரித் திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சமத் தொழிலுக்கின்றியமையாததென்னப் பல்லாண்டுகளுக்கு முன்னர் சட்ட நிரூபணசபை அங்கத்தவர் காலஞ்சென்ற திரு.க. பாலசிங்கமவர்கள் உணர்ந்து அரசவைகளிற் பேசிஅடிகோலி வைத்தார். பின்னர் ஏதோகற்கால மிருந்ததென்ன அத்திட்டம் உருவாகி ஊக்கமாகவேலை ஆரம்பமானது. இப்போது பார்த்தால் விகட இராமன் குதிரைபோல பன்னெடுநாட் பிரயாணமாகத் தோற்றுகின்றது. பத்தாண்டுகளுக்கு முன் இத்திட்டத்தாலேதும் உபயோகம் உண்டாகாதென ஒரு உத்தியோகத்தர் கூறியிருக்கின்றார்.

அரசாங்கத்துக்குப் பண நெருக்கடிதான். ஆனால் இந்த நெருக்கடியிலும் இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் உல்லாசயாத்திரைகள் எல்லாம் நடைபெறுகின்றனவே. நெருக்கடி வந்தால்என்னவராதுவிட்டால் என்ன குபேர வாழ்வு குறைவாகாது! ஏழைகளுக்குதவும் பொதுசன வசதித் திட்டங்கள்மட்டும் மட்டுப்படுத்தப் படுகின்றனவே. இருக்கின்ற மாதிரி உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன் என்றுங்கு நல்ல நீரும் இல்லை வெல்லைவெளியில் உப்பு நீரும் இல்லை என்றாகிவிடுமோ என அஞ்சவேண்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ மார்கழீ மூ
கஉ உ வெள்ளிக்கிழமை

## வீதிகளில் விபத்துக்கள்

வானளாவப் பறக்கும் இரதங்களை நிபுணர்கள் கண்டுவிட்டார்கள் என்றாலும் அவ்வியந்திரங்களும் அடிக்கடி ஆபத்துக்குள்ளாகி அநேகரையுயிர் நீக்கச் செய்கின்றன. திரைகடலோடும் நாவாய்களும் கரைகாணாது மறைந்து பலரா விலைப்போக்க வேதுக்களாகின்றன. தரையிலும் வாகனங்கள் புரண்டு போக்குவரவு செய்கின்றவர்களைத் தாக்கிவிடுகின்றன. ஆனால் இவ்விபத்துக்களையெல்லாம் விசாரணை செய்கின்றவர்கள் யாரிலேயோ குற்றங்கண்டே விடுகிறார்கள். ஆகவே இவ்வித ஆபத்துக்கள் நேர்வதற்கான நிமித்தங்களை நன்கறிந்து அவதானித்து அவ்வித சந்தர்ப்பங்களை மக்கள் தவிர்த்துவிட வேண்டுமென்பது பொது சனங்களினதும் அரசாங்கத்தினதுங் கடமையாகும்.

இந்நாட்டிலே போக்குவரத்து வீதிகள் விசாலமில்லாமலிருப்பதனாலும் வாகனங்கள் தொகையும் உபயோகமும் பன்மடங்கு பெருகிவிட்டமையாலும் பொதுவாக எக்காரியத்தையும் சுயநலவிருப்பாற் செய்யும் இழிவான குணம் கூடுதலாக மக்களிடத்தே காணப்படுவதனாலும் கடவுட் பயம் சற்றேனுமில்லாமையாலுமே விபத்துக்கள் மலிந்துவிடுகின்றன.

வீதிகளிலே செல்பவர்கள் வாகனங்களில் ஆனால் என்ன, நடையில் ஆனாலென்ன மற்றையோர் அவ்வழி செல்வார்கள் செல்லுதற்குரித்துடையவர்கள் என்ற எண்ணமில்லாதவர்களாகவே காணப்படுகிறார்கள். மோட்டார் இரதத்திற் போகின்றவர்கள் மற்றையோருக்குவழிவிடமாட்டார்கள். மாட்டு வண்டியிற் செல்பவர்கள் பாதையை விட்டோரமாகச் சென்று ஏனைய வாகனங்களுக்கிடங் கொடுக்க மாட்டார்கள். இதற்கிடையிலே துவிசக்கரங்களும் கால்நடைப் பிரயாணிகளும் சற்றும் விலகி வசதி செய்யமாட்டார்கள். இந்த நிலைமையிலே வாகனங்கள் ஒன்றோடொன்று மோதப்படுவதும் உயிர் சேதப்படுவதும் நூதனமன்று.

இன்னமும் பல இடைஞ்சல்களை வீதிவழியே காணலாம். துவிச்சக்கரத்தில் ஒருவர் போக்குவரவுசெய்யவே இடமுண்டு. ஆனால் அதிலோ ஓராளுக்குதவியாகப் பலரும் முன்னும் பின்னும் இடையிலுமாக நின்று பவனி செய்வார்கள். அல்லாமலும் புல்லுக்கட்டும் நெல்லுக்கூடையும் தடியும் தண்டும் வைத்துக்கொண் டியக்குகிறார்கள். சாமான்கள் ஏற்றும்மோட்டார் இரதங்களில் வீதியை மறைக்கும விசாலமளவும் பொருட்களைப் பொதிந்துவிடுகிறார்கள். மாட்டு வண்டிகளில் கோம்பையும் வைக்கோலும் மரக்குழையும் வீதியை மூடி ஏற்றிவிடுகிறார்கள்.

அவ்வளவுமா? வீதிகளில் அங்கும் இங்கும் பெரிய மரத்துண்டுகள் அவ்வியாபாரிகளாற் போடப்பட்டிருக்கின்றன. கற்குவியல்களும் இடையிடையே அமைக்கப்படுகின்றன.

இவ்வித நிலைமையில் வேகமாகவே செலுத்த வேண்டும் என்று நினைத்தும் மதுவால் ஊக்கப்படுத்தப்பட்டும் சாரதிகள் வாகனங்களைக்கொண்டு செல்லவேண்டுமேயானால் விபத்து விதியாய் வரவேண்டுமல்லவா?

இவற்றையெல்லாம் அரசாங்கப்பகுதியார்கள் கண்டுங்காணாதவர்களாய் இருக்கிறார்களே! அல்லாமற் கண்டவர்கள்போல நடிக்கவேண்டுமென்றால் ஒரு துவிச்சக்கர வண்டியிலிருவர் சென்றார்கள் என்று இடையிடையே வழக்குத் தொடுப்பார்கள். வீதிகளிலுள்ள வயது முதிர்ந்த பாரிய மரக்கொம்பர்களைப் பழுதடைந்தாலும் வெட்டி வீழ்த்தமாட்டார்கள். அக்கொம்புகள் புயலடித்துக் காற்றினால் வீழ்த்தப்பட வேண்டியவைகளே!

கிராமச் சங்கம் உண்டு, பகிரங்க வேலைப் பகுதி உண்டு, ஊர் காவலாளர்கள் உண்டு, கிராம அதிகாரிகள் உண்டு. ஆனால் மேலே காட்டப்பெற்ற மனித மமதையால் ஆக்கப்பட்ட முட்டுக்கட்டைகளுமுண்டு.

இதற்குப் பரிகாரம் வீதி ஒழுங்குபாக்க அலுவலாளர்களை அரசாங்கம் அமைக்கவேண்டியது மல்லாது உள்ளூர் நிர்வாகச் சங்கங்களும் அப்பொறுப்பையுணர்ந்து ஆவன செய்தலும் வேண்டும்.

---

யாழ், சைவ பரிபாலன சபைக்கு
ஓர் சீவிய அங்கத்தவர்

—0—

பரம்பரைச்சிவபூசா தூரந்தரரும், திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபைப் பிரதி அக்கிராசனருள் ஒருவருமாகிய கொழும்பு ஸ்ரீ K V S. சுந்தரம் அவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் சீவிய அங்கத்தவராகியுள்ளார்.

---

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 28—12—52——3—1—53

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

தேவையானதை இந்த வாரம் நேரிற் பேசிப் பெறக்கூடியதாயிருக்கும். மனச்சமாதானமும் நிச்சயம். குடும்ப விஷயங்களில் புது வருடப்பிறப்புநாள் திருத்தத்தைத் தரும். தனலாபமும் நிச்சயம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

பணத்துறை வியாபாரத்துறைகளின்போக்குத் திருந்திக்கொண்டேவருகிறது இந்தவாரம். போட்டியிடுவோரைவெல்லுவீர். ஆனால் குடும்ப சமாதானம் சிறிது நிலைகுலைக்கக்கூடும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்தவாரம் சகோதர சகோதரிகள் அதிகம் நன்மையாயிருப்பர். சமூகசித்தியும் வியாபார அதிட்டமும் நிச்சயம். புது முயற்சிகள் விருப்பிய பலனைத் தரும். வார இறுதிக்குமுன் பணக்கஷ்டங்களை நீக்கக்கூடியதாயிருக்கும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

செலவானவாரம். ஆனால் குடும்ப நிலைமை புதன்கிழமையின் பின் திருந்தும். இலாபநட்டம் பாராது மிஞ்சிய வேலை செய்தால் புது முயற்சிகளிற் சித்தி நிச்சயம்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

இந்த வாரம் உம்முடைய விஷயங்களில் அதிக திருத்தம் காண்பீர். செவ்வாய்க்கிழமை சனி மாறுதல் அதிக ஆறுதலைத் தரும். புது முயற்சிகளை அச்சமின்றித் தொடங்கலாம். ஆனால் சித்திரைக்கு முன் பருப்பிக்கக்கூடாது.

**கன்னிராசி** உத்திரம் 2 3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்த வாரம் சனி மாறுவதால் நீரும் நன்மையடைவீர். அதிகம் நன்மைபான மாற்றமல்ல ஆனால் அதிக ஆறுதல் நிச்சயம். குடும்ப விஷயங்களும் பண விஷயங்களும் திருந்தும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

இந்த வாரம் புது முயற்சிகள் தொடங்கும்பொழுது போதிய பாதுகாப்பு அமைக்க வேண்டும். முதல் இரு நாட்களும் உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும். பின்பு திருத்தம் நிச்சயம். ஆனால் விஷயங்களைத் தீர்மானிப்பதற் கஷ்டப்படுவீர்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வாரத்தின் முன் இரு நாட்களும் நன்மையாயிருக்கும். ஆனால் செவ்வாய் புதனும் வியாழன் காலையும் கொண்டாட்டத் தன்மையையும் செலவையும் குறைக்கவும். இல்லது கஷ்டங்களுக்குள்ளாவீர். வார இறுதி திரும்பவும் நன்மையாகின்றது.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

புதுவருடத் தொடக்கத்துடன் கூடிய பொறுப்பு ஏற்கவேண்டி வரும். பணநிலைமைகள் திருந்துதல் நிச்சயம். நண்பர் அதிக உதவி செய்வர். வியாழன் பிற்பகல் வெள்ளி சனி கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**மகரராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் இலகுவாகச் சிறிது பணஞ் சம்பாதிக்கக்கூடும். குடும்ப சமாதானமும் மனச் சமாதானமும் நிச்சயம். வார இறுதியில் கடலுக்கப்பாலுள்ள நாடுகளிலிருக்கும் இனத்தவரிடமிருந்து சந்தோஷ புதினம் பெறுதல் நிச்சயம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

நெடுங்காலமாயிருந்த சிக்கல்கள் நீங்குதற்கு இந்தவாரம் அதிக உதவியாயிருக்கும். எட்டாமிடத்திலிருந்து ஒன்பதாமிடத்துக்குப் போவதால் சனியின் மாற்றம் நன்மையாயிருக்கும். புதவருடத்திலிருந்து எந்தப் புதுத் திட்டத்தையும் தொடங்கலாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

எல்லாப் புதுக் கருமங்களிலும் சிறிது காலத்துக்குக் கவனமாயிருக்கவும். சிறு அபாயங்களுக்கு இடமுண்டு. தனலாபமுண்டு. ஆனால் தகுதியான அளவுக்கு ஒதுக்கிவைக்க முடியாமலிருக்கும்.

---

# திருவாதவூரடிகள் திருவமுது

## அன்பொழுகும் அருட் பாக்கள்

"தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசக மென்னுந் தேன்."

"திருவாசகத்துக்குருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்பது ஆன்றோரின் அநுபவ மொழி. நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சினுள்ளே புக்கு இருக்கும் ஈசனைக் கண்ணாரக்கண்டு ஞானோபதேசம் பெற்ற, ஞான வள்ளலாகிய மணிவாசகப் பெருந்தகையார் தமது மணிவாக்கால் திருவாசகம் எனனும் திவ்விய தேனைத் திருவாய் மலர்ந்துள்ளார். பன்னிரு திருமுறைகளுள் திருவாசகம் எட்டாம் திருமுறையாக வகுக்கப்பெற்றுள்ளது. திருவாசகத்தின் பெருமை பற்பல நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சைவர்களாகிய நமக்குத் திருவாசகம் ஓர் அரும்பெரும் பொக்கிஷமாக அமைந்துள்ளது. அதனை நாம் தினமும் அன்புடன் கற்று அறிவுடையோராய் வர வேண்டும். எனவே திருவாசகத்தின் மாண்புகளைச் சிறிது ஆராய்வதே இச் சிறு கட்டுரையின் நோக்கமென்க!

அன்பு, அருள், அறம் இவைகளைத் திருவாசகம் எடுத்துரைக்கின்றது. கற்போர் உள்ளத்தைக் கரைந்துருகச் செய்வது திருவாசகமெனின் அது மிகையாகாது. சிவாகமப் பயிற்சியும் சமயநூல் அறிவும் கைவரப்பெற்ற, சிவாநுபூதிச் செல்வராகிய மணிவாசகப்பெருமான் பகர்ந்த, திருவாசகத்தை எல்லாம் வல்ல எம் இறைவனே அந்தணனாக மானுடச்சட்டை தாங்கிவந்து தமது திருக்கையில் எழுத்தாணி கொண்டு ஏட்டினக்கண் எழுதினானென்றால் அதன் பெருமை இயம்பவும் வேண்டுங்கொல்!

பண்டிதர் முதற் பாமரர் ஈறாக யாவரும் படித்து இன்புறத்தக்கதும் ஓதுவார்க்கு உறுதுணையாய் இருந்து பேரின்பமளிப்பதும் திருவாசகமே. சுவாமிகள் திருவாசகம் பாடத் தொடங்கித், திருவைந்தெழுத்தை முதலாகக்கொண்டு, ஆண்டவன் திருவடிகளை வாழ்த்தும் முகமாகக் கூறுகின்றார். அப்பாடலில் சில அடிகளைச் சிறிது நோக்குவாம்.

ஸ்ரீ சி. கணேசலிங்கையர்
... எழுதியது ...

"நமச்சிவாய வாழ்க
நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன்
தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான்
தாள் வாழ்க
ஏகன் அநேகன்
இறைவன் அடிவாழ்க ......'

இதனைப்போல் இன்னும் அநேக உண்மைகளை ஒவ்வோர் அடிதோறும் எடுத்துக்கூறுகின்றார். எண்பத்துநான்கு நூறாயிரம் யோனி பேதத்தின் வகையையும் அந்த யோனிகள் தோறும் தான் பிறந்து இறந்து இளைத்துப் பின் மெய்யான திருவடிகளைக் கண்ட தன்மையையும் கீழ்வரும் அடிகளில் விரிவாக விளக்கிக் கூறுகின்றார். அவ்வடிகளைச் சற்று நோக்குவோமாக;

"........பொல்லாவினை யேன்
புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப்
புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப்
பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி
முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற
இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்
பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள்
கண்டு இன்று வீடுற்றேன்..."

மணிவாசகப் பெருமான் திருச்சதகம் பாடுங்கால் மனத்தை நோக்கிக் கூறுமுகமாகக் கூறுகின்றார். மனமே! நீ ஆண்டவன் முன்னிலையில் நின்று அன்பிற்குரிய செயல்கள் யாதொன்றையும் செய்கின்றாயில்லை. இனி யான் செய்வது யாது? என்று மனத்திற்கு இடித்துக் கூறுகின்றார். அப்பாடலைச் சற்றுக் கவனிப்பாம்;

"ஆடுகின்றிலை கூத்துடை-
யான்கழற் கன்பிலை யென்புருகிப்
பாடுகின்றிலை பதைபதைத்துஞ்
செய்கிலை பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே"

இங்ஙனம் அடிகள் தம் பாடல்கள் தோறும் மனத்திற்கு நற்புத்தி புகட்டுகின்றார். குரங்கினை யொத்த மனமே! உள்ளத்தூய்மையுடனும், பக்தி வைராக்கியத்துடனும் ஆண்டவன் திருவடிகளை வணங்கு! அத்துடன் ஆண்டவன் நாமத்தைப் புகழ்ந்து கூறு!! என்று மனத்திற்கு அறிவுறுத்துகின்றார். எனவே இவைகளை உற்று நோக்குவார்க்குத், திருவாசகத்தின் மாண்பு வெள்ளிடை மலைபோல் விளங்கும். ஆகவே திருவாசகத்தின் திருச்சிறப்பு அளவிடற்கரியன. அவற்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## வண்ணை வைத்தியேசுவரசுவாமிகோயில்

இக்கோயில் மகௌதாரிய மகாபிரபுவாகிய கோபாலசெட்டியார் வைத்தியலிங்க செட்டியார் அவர்களாலே அமைப்பிக்கப்பெற்று இற்றைக்கு 162 வருடங்கட்கு முன் (1790 AD) சாதாரண ஸ்ரீ சித்திரை மீ பூர்வபக்ஷ ஸப்தமி திதியோடு கூடிய புனர்பூச நக்ஷத்திரத்திற் பிரதிஷ்டை செய்யப்பெற்று நித்திய நைமித்திகங்கள் விதிப்படி கிரமமாக நடைபெறுதற்கான வீடு, கிட்டங்கி, கடை விளைநிலம் தோட்டம் திருஆபரணம் முதலானவைகள் தருமசாதனம் செய்யப்பெற்றுள்ளன.

இன்னும் இந்த வைத்தியலிங்கச் செட்டியார் அவர்கள் வைத்தியேசுவர சுவாமிகோயிலைச் சிறப்பாக அமைத்தமையோடு வேம்படி பிள்ளையார்கோயில் என வழங்கும் கடையடிப் பிள்ளையார் கோயிலையும், கற்கட்டு வைரவர்கோயிலையும் வண்ணார்பண்ணை வடமேற்கில் ஐயனார்கோயிலையும், பிடாரிகோயிலையும முற்றவெளி மாரியம்மன் கோயிலையும் அமைப்பித்து நித்திய நைமித்திகங்கள் கிரமமாக நடப்பதற்கான நிபந்தங்கள் அமைத்து இவ் ஆலயத்துக்குப் பரிவார ஆலயங்களாக நிறுவி உள்ளார். இவ்வாலயங்களை குறித்த வைத்தியலிங்கச்செட்டியார் காலத்தின்பின் அவர் புத்திரர், பௌத்திரர் முதலாம்வழித் தோன்றல்கள் பாரம்பரையாகப் பரிபாலித்துவந்தார்கள். பின் 1906 ஆ புரட்டாதி மீ முதல் 1914 ஆ மாசி மாதம்வரை குறித்த வைத்தியலிங்கச் செட்டியார் அவர்களது வழித்தோன்றலாகிய ஸ்ரீ பொ. கந்தப்பசெட்டியாரிடமும் ஸ்ரீ சிவ இராமசாமிச் செட்டியாரிடமும் அதிகாரம்பெற்று யாழ்ப்பாண நாட்டுக்கோட்டை நகரத்தார் ஆகிய செட்டிப்பிள்ளைகள் நடத்திவந்து 1914 ஆ மாசி மாதம் திரு. பொ. கந்தப்பசெட்டியார் தமது சிரேஷ்டபுத்திரர் பொன்னுச்சாமி செட்டியாரிடம் ஒப்புவிக்க, அவர் தமது சீவிய பரியந்தம் நடத்திவந்து 1939 ஆ சந்ததியில்லாது சிவபதம் அடைய, அவருடையசகோதரர் திரு. பொ. க. வைத்தியலிங்கச்செட்டியார் ஒரு வருஷகாலம் சிறப்பாக நடத்தி இவ்வாலயத்தைப் புதுக்குவித்துச் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் செய்வதற்கான ஆயத்தங்கள் செய்துகொண்டிருக்கும்போது கார்த்திகைப்பிரகாரம சிவபதம்அடையலாயினர்.

அவருக்குப்பின் அவர் பத்தினி கண்ணம்மாள் இவ்வாலயத்தைப்புதுக்குவித்துப் புனருத்தாரணம் செய்விக்கும் நோக்கங்கொண்டு இற்றைக்கு 10 வருஷங்களின் முன் வாலஸ்தாபனஞ்செய்து ஆலயத்தைப் புதுக்கி அமைப்பதற்கான திருப்பணிகள் செய்தும், எக்காரணம்பற்றியோ அவை பூர்த்தியாகவில்லை.

இப்போது குறித்த திரு. பொ. க. வைத்தியலிங்கச்செட்டியாரின் சிரேஷ்டபுத்திரன் திரு. கந்தப்பச் செட்டியார் பராயமாய் விவாகம் செய்து புத்திரப்பேறுபெற்று இவ்வாலயத்தையும் வேம்படி விநாயகர் கோயில் முதலான பரிவாரஆலயங்களையும் பொறுப்பேற்று நடத்தி வருகின்றார். சென்ற நான்குமாத காலமாக இவ்வாலயத் திருப்பணியை ஆரம்பித்துச் செய்வித்துவருகிறார். இன்றுவரை பெரும்பகுதி வேலை பூர்த்தியாகிவிட்டது. எஞ்சியிருக்கும் திருப்பணியையும் பூர்த்திபண்ணி வருகிற தை மீ 13 உ (26—1—53) நிகழும் சுபமுகூர்த்தத்தில் அஷ்டபந்தன சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் செய்விப்பதாக சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த இந்துசாதனப் பத்திரிகையிலே ஓர் விஞ்ஞாபனம் செய்துள்ளார்.

இவ் வாலயத்திலே எழுந்தருளியிருக்கும் வைத்தியேசுவரப் பெருமான், தையல்நாயகி முத்துக்குமாரசுவாமி முதலான மூர்த்திகளின் அனுக்கிரகப் பிரவாகமித் தன்மையதென்று சொல்லவொண்ணு அதீதமானவை!

இப்படிச் சிறந்திருக்கும் புராதனஆலயத்தைப் புதுக்குவித்து விதிப்படி சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் செய்விக்கும் பெரும்பேறு எல்லாருக்கும் கிடைப்பதல்ல. இத் திருப்பணி விரைவில் இனிது நிறைவேறும் வண்ணம் பாலாம்பிகாசமேத வைத்தியேசுவரப்பெருமான் திருவருள்புரிவாராக

இங்ஙனம் இக்கோயில் புதுக்குவித்து அஷ்டபந்தனஞ் செய்து சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் செய்விப்பதற்கும் மண்டலாபிஷேகம் செய்விப்பதற்கும் பங்குனி மகோற்சவம் செய்விப்பதற்கும் பெருந்தொகைப் பணம் தேவையல்லவா? இவ் வாலயத்துக்குரிய கடைகள், கிட்டங்கிகள், விளைநிலம் தோட்டங்களையெல்லாம் வாடகை குத்தகைக்கெடுத்துள்ளவர்கள் எல்லாரும் தாங்கள் கொடுக்கவேண்டிய வாடகை குத்தகைப் பணங்களையெல்லாம் இந்த நல்ல நேரத்திற் கொடுத்து உதவுவார்களாயின் இக்கும்பாபிஷேகம் இனிது நிறைவேறும்; இங்ஙனம் செய்பவர்களுக்கு வாலாம்பிகா சமேதவைத்தியேசுவரப்பெருமான் திருவருள் தவறாது சித்திக்கும்

சிந. மு. ப. சிதம்பரநாதச் செட்டியார்.
வண்ணை,

## கலா சித்திர கவியாட்டு விழா

யாழ்ப்பாண நடன கலா சாலை அதிபர் திரு. V, R. இராசநாயகம் அவர்களால் ஒழுங்கு செய்யப்பெற்ற கலா சித்திர களியாட்டு விழா 20-12-52 தொடக்கம் நன்கு நடைபெறுகின்றது. கலாசித்திர நிபுணர் பலர் இவ்விழாத் திறப்பிலே கலந்துகொண்டார்கள், கொள்வார்கள். இந்திய கலாநிபுணர் திரு. இரஞ்சன் ஆரம்ப விழாவைத் திறந்து வைத்துப் பாராட்டுரை பகன்றனர்.

4-1-53 வரைக்கும் தொடர்ந்து நடைபெறவிருக்கும் இவ்விழா யாழ்ப்பாண நடனகலா சாலைக் கட்டட நிதிக்கென ஆரம்பிக்கப் பெற்றது. இக் கலாசாலையைப்பற்றி முன்னொருநாளில் இந்திய அரசாங்கப் பிரதிநிதியாயிருந்து இப்பொழுது இந்தியநாட்டிலே தேசாதிபதியாக விருக்கும் திரு. வி. வி. கிரி அவர்கள் "தாய்நாட்டையும் சேய்நாட்டையும் இணைக்கும் கலையை வளர்க்கும் இக்கலாசாலை பல்கிப் பெருகட்டும்" என்று புகழுரை கூறியிருப்பதே இதன் உயரிய நோக்கத்தைப் புலப்படுத்தும்.

கலைவளர்ச்சி இந்நாட்டில் கன்னிலைக்கு வர உயர்தர நிபுணர்கள் ஆதரவு வேண்டும். இக்களியாட்டு விழா காரியத்திற் கண்ணுகிக் கலைவளர்ச்சிக்குப் பணி புரியக்கூடிய வகையில் நிதி திரட்டும் என்று நம்பப்படுகின்றது.

## ஆசிரியர் தேவை

அராலி தெற்கு, சரஸ்வதி வித்தியாசாலையிற் கடமையாற்றுதற்கு பயிற்சி பெற்ற ஓர் உதவியாசிரியர் தேவை. சங்கீதம் சித்திரம் என்பனவில் விசேட தகைமையுடையோராது விண்ணப்பங்கள் விசேட மதிப்புப் பெறும்.

மானேசர்; சரஸ்வதி வித்தியா சாலை என்ற முகவரியில் 10-1 53 க்கு முன்னர் விண்ணப்பிக்குக.

மு. சதாசிவம்
காரியதரிசி
அராலி சரஸ்வதி மகாசபை

25—12—52
அராலி. M209 26

## திருவாதவூரடிகள் திருவமுது

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றைச் சைவ நன்மக்கள் நன்கு உணர்ந்து தினந்தோறும் பக்தியுடன் பாராயணஞ் செய்தல் வேண்டும். அங்ஙனம் பாராயணஞ் செய்வார்களேயானால், அவர்கள் செய்த தீவினை யாவும் அகன்றுவிடும். ஆன்மா பரிசுத்த நிலையடையும். ஆண்டவனின் அளவிடற்கரிய அனுக்கிரகமும் கிடைக்கும். எனவே சைவ மதத்தவர்கள் அனைவரும் காலைக்கடன் முடித்துக் கடவுளை வணங்கித் திருவாசகத்தை ஓதித் தீவினை அகற்றி உய்வார்களாக.

"வாதவூ ரந்தணர் தந்திரு
வாய்மை விளங்கு திருக்கதை
யோதின ரன்புட னொண்செவி
யூடு முகந்தது கேட்டவர்
போதமெஞ்ஞான முறுஞ்சுகபோக
முடன்புகழ் பெறுவர்க
ளுதில்பவங்க டொலைந்தபின்
சேர்குவர் வண்சிவலோகமே."
(திருவாதவூரடிகள் புராணம்)

## 'இராமாவதார' எழில் நயம்

கம்பர் இயற்றிய இராமாவதாரக் கவிகளுள் பற்பல மிகவும் நயமுடையன. அவற்றுள், சுந்தர காண்டத்துள் வரும் சில கவிகளின் நயத்தை மாத்திரம் இப்போது எடுத்துக்காட்டுதும்.

'புறத்துறலஞ்சி வேறோ
ராணம்புக் குறைதல் போக்கி
மறத்தொழி லரக்கர் வாழு
மாநகர் மனுவின் வந்த
திறத்தவை யிராம னென்னுஞ்
சேவகற் பற்றிச் செல்லும்
அறத்தவை யரசன் றிண்பே
ராழியு மனைய னானான்."

இச்செய்யுள், கடல் கடந்து இலங்கை செல்லு மனுமன் தருமதெய்வத்தால் விடுக்கப்பட்டு இலங்கை செல்லும் அவனது ஆஞ்ஞா சக்கரத்தைப் போன்றான் என்னும் பொருளையுணர்த்துகின்றது.

(இதன் பொருள்) கடல் கடந்து இலங்கை செல்லும் அனுமன் எதுபோன்றான் என்றால் இலங்கையில் வசித்த தருமதெய்வமானது இராவணன் தனக்கு இடர் செய்ததால், மன் எனக்குத் துணையானான் இனி யான் அச்சமின்றி இலங்கையிலும் என் ஆஞ்ஞையைச் செலுத்தலாமென்று துணிந்து) தன் ஆஞ்ஞா சக்கரத்தைச் செலுத்த அது போகுந் தன்மையையுமொத்தான் என்பது.

இதன்கண் தோன்றும் நயங்கள் எவை என்றால், திரிலோகங்களுள்ளும் இராவணனை வெல்லத்தக்க வீரன் ஸ்ரீராமனே என்பதும், இராவணன் அரசுசெய்யத் தொடங்கிய பின் இலங்கையிலே தருமச்செயல் சிறிதும் இடைவரா தென்பதும் அங்கே செல்லும் அநுமனுடைய செலவே, தருமச்செயல் இலங்கையிலும் தோன்றுதற்கு ஒரு தொடக்கமான காலம் என்பதுமே.

இந்நயங்கள் எப்படித் தோன்றின என்றால், 'புறத்துறல் அஞ்சி' என்றதனால் தருமதெய்வம் இராவணனால் அகற்றப்பட்டது என்பதும், 'வேறோராணம்புக் குறைதல் போக்கித் — திறத்தவை இராமனென்னுஞ் சேவகற்பற்றி' என்றதனால் திரிலோகங்களுள்ளும் ஸ்ரீராமனே சிறந்த வீரன் என்பதும், ஆழிபோன்றானென்றதனால் அநுமன் போனகாலமே தருமம் அங்கே உண்டாவதற்கு ஒரு தொடக்கமான காலம் என்பதும் தோன்றின என்பது.

இராவணாதி இராக்கதர் இறந்தற்கும், அவர்கள் இறந்தபின் அங்கே தருமம் வளர்தற்கும் அநுமன் செலவே ஒரு தொடக்கமான காலம் என்பதை உணர்த்தற்கு, ஆசிரியர், இராமனைத் துணையாகப் பற்றித் தருமதெய்வம் சென்றது போன்றான் என்னாது அதன் ஆழி சென்றதுபோன்றான் என்று கூறியதே, அவர் மதிநுட்பத்தை யாவரும் வியக்கத்தக்கதாக அமைத்த நயம் என்க. 'இராமற்பற்றி' என்றதனால் இராமனாலேயே இலங்கையில் இனி அறம் காட்டப்படும் என்பதும் பெறப்படும். அதுவுமோர் நயம். இராமன் காட்டுதற்கு அநுமன் செலவே ஒரு தொடக்கமான காலம் என்க புறத்துறலஞ்சி என்பதற்கே, வேறிடத்திருத்தற்கு அஞ்சி என்றும் பொருள் கூறலாம். இராவணனுக்கு, சிவன் திருமால் இந்திரன் என்னு மூவருந் தோற்றார் என்டதை,

"முழுவா னவரா யுலகமொரு
மூன்றுங் காக்கு முதற்றேவர்
மழுவா ணேமி குலிசத்தின்
வாய்மை துடைத்த மார்பானை"
(ஊர்தேடு. ௨௬) என்னுஞ் செய்யுளாலறிக.

### — செந்தமிழ் —

அங்கே வசித்தற்கு அஞ்சி அவ்விலங்கையை விட்டுப் புறப்பட்டுத் தனக்குத் தஞ்சமாகத் தக்கவர்கள் யாரென்று தன்னுள்ளே ஒவ்வொருவராக நாடிற்று. நாடிய போது சிவன் திருமால் இந்திரன் என்னு முத்தேவர்களும் மற்றுமுள்ள தேவர்களும், முனிவர்களும் முதலாயயாவரும் அவனுக்கு அஞ்சித் திரிபவர்களாயே காணப்பட்டார்கள். அதனால் அவர்களிடம் போதலிற் பயனில்லையென்று கருதி, அவர்களிடம் தஞ்சம் புகுதலைவிட்டு, இனியாரிடம் புகலாமென்று கருதி, அவதார புருடனாய் விளங்கும் ஸ்ரீராமனே இராவணனை வெல்லத்தக்கவனென்று கருதி, அவனிடம்போய் அவனைத் துணையாகப் பற்றிக்கொண்டு (இரா

வண்ணை தையல்நாயகி
கலிவெண்பா திருவூஞ்சல்
முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல்

சைவப்பிரகாச யந்திரசாலையில் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை சதம் 2½

## மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு தானஞ் செய்வாரிற் றலை.

## சைவபரிபாலன விஞ்ஞாபனம்

நாவலர்பெருமானின்உயரியநோக்கங்களைத்தழுவி எம் சைவசமயத்தையும்தமிழையும் பரிபாலிக்கும்பொருட்டுச் சென்ற அறுபத்திரண்டு வருடங்களாகத் தொண்டுசெய்துவருகிற வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயத்தில் சிரேஷ்ட தராதரப்பத்திரவகுப்பு ஈருசவுள்ள சகலவகுப்புகளுங் கிரமமாக நடத்தப்படுகின்றன.

உயர்தர வகுப்புகளில் பெண்கள் மாத்திரம் சேருவதற்குரியர். பண்டிதர்வகுப்பு பிற்பகல் 4—5½ வரை நடத்தப்பெறுகிறது. சேர விரும்புவோர் 7-1-53 புதன்கிழமை காலை 9 மணிக்கு பாதுகாவலருடன் நேரிற் சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காரைநகர்
24 12 52

சு. இராமசாமி,
தலைமை ஆசிரியர்

## வண்ணை ஸ்ரீ விசுவலிங்க வைத்தியேச்சுவர சுவாமிகோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன சம்புரோக்ஷண கும்பாபிஷேகம்

வாலாம்பிகா சமேத வைத்தீசுவரப் பெருமான் திருவருள்முன்னிற்க. யாழ்ப்பாணத்திலே மிக்க அனுக்கிரகம பெற்று விளங்கும் வண்ணை ஸ்ரீவிசுவலிங்க வைத்தீசுவர சுவாமி கோவில், பழுதுற்று இருத்தலால், அதைப் புதுக்குவித்துச் சம்புரோக்ஷணம் செய்விப்பதற்காகச் சில வருஷங்கட்கு முன் வாலஸ் தாபனம் செய்யப்பெற்றுள்ளது. ஆலயம் இப்போது புதுக்குவிக்கப்பெறுகிறது. திருவருளை முன்னிட்டு வருகிற தை மாசம் 13 உ (26—1—53) திங்கட்கிழமை மிருகசீரிட நட்சத்திர சுபமுகூர்த்தத்தில் அஷ்டபந்தன சம்புரோட்சண கும்பாபிஷேகம் செய்ய நிச்சயித்திருக்கிறேன்

இந்தக் கும்பாபிஷேகத்துக்கு குருக்கள்மாரை அழைத்துவரவும் மஞ்சள் நவதானியம் முதலான திரவியங்கள் வாங்கிவருவதற்குமாக யாழ்ப்பாணப் பகுதிவிவாகப்பதிவுகாரர் திரு. சி. பசுபதிச்செட்டியார் அவர்களும் எனதுகனிஷ்டன் செல்வச்சிரஞ்சீவி முத்தைக்காயாரோகணனும் இப்போது கொழும்புக்குச்சென்றிருக்கிறார்கள், இன்று அங்கிருந்து இந்தியாவுக்குச் செல்வார்கள்.

வைத்தியேசுவரசுவாமி,
தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம், 25-12-52.

இங்ஙனம்,
வை. கந்தப்பசெட்டியார்,
மனேஜரும் சொந்தக்காரரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்திய சங்க நிவாரணத் தொண்டு

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறும் ஒரு முறைப்பாட்டைப் பிரதமருக்கு அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

புயல் நிவாரண வேலைகள் சம்பந்தமாக வேண்டிய அதிகாரிகளுடன் சந்திப்பதற்காக திரு. S H. பேரின்பநாயகன் அவர்கள் தலைமையில் ஒரு துணைக்கோஷ்டி அனுப்பப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் புடலாற் சேதம் ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில வெளியிலிருந்து அரிசி நெல் கொண்டுவர உள்ள தடையை உடனே நீக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை இந்தியக் காங்கிரஸ் புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்காக இச்சங்கத்திற்கு ரூபா 500 ஒதுக்கியிருப்பதற்குச் சங்கநிர்வாகசபை நன்றி தெரிவித்தது.

சங்கம் சேர்க்கவிருக்கும் விவசாயிகள் உதவி நிவாரண நிதிக்கு எல்லா மக்களும் ஆதரவளிக்க வேண்டுமெனக் கோரும் ஓர் வேண்டுகோள் பத்திரிகைகளுக்கு அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது. பஸ் விசாரணைச் சபைக்கு முறைப்பாடு கொடுக்க ஓர் துணைக்கோஷ்டி அமைக்கப்பட்டது. பிற்பகல் 1.30க்கு கூட்டம் நிறைவெய்தியது.

## அரசாங்க அறிக்கை கிருஷிக இலாகா

பெண்கள் கிருஷிக பாடசாலை திருநெல்வேலி யாழ்ப்பாணம் விவசாயச் செய்கையிலும், மிருக வளர்ப்பிலும் வீட்டுப்பணியிலும், கைத்தொழில், சம்பந்தமான பாடங்களிலும் சுதேசபாஷையில் பயிற்சி பெற விரும்பும் விவாகமாகாத பெண்பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் 7-1-53 வரை யாழ்ப்பாணம் கிருஷிக உதவியோகத்தரால் ஏற்றுக்கொள்ளப்படும். இத் திகதியின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பயிற்சிக் காலம் 1953, மாசி மாதம் 2ம் திகதி தொடக்கம் 1 வருடம் வரை. மற்று விபரங்களும் விண்ணப்பப்பத்திரங்களும் யாழ்ப்பாணம் கிருஷிக உதவியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

G, 52 23, 26—12—52

## நன்னெறி தழுவித் தீயவை விலக்கல்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

வன் மனிதநிலையினின்று இழிந்து விலங்கு நிலையை அடைந்தவனாக எண்ணப்படுகிறான். ஒழுக்க விதிகளைப் பேணுதல் வருங்கால சந்ததிகளின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாததாகும். தாய் தந்தையர் சிறந்த ஒழுக்கமுடையவர்களாய் இல்வாழ்க்கையை இனிது நடத்தி வந்தால் அவர்கள் தம் குழந்தைகள் நன்றாகப் பேணி வளர்க்கப்பட்டுச் சிறந்த முற்போக்கை அடைகிறார்கள். எந்தச் சமுதாயம் ஒழுக்க விதிகளுக்கு மதிப்பு வைத்து மதத்தின் பெயராலும் சமூக அங்கீகாரத்தாலும் தண்டனை முதலியவற்றாலும் அவற்றை மக்களிடையே வன்மையாக வற்புறுத்தி வந்துளதோ அதுவே இன்றளவும் அழியாமல் நிலை பெற்று வருகிறது.

### ஒழுக்கக்கேட்டிற்குப் பரிகாரங்கள்

ஒழுக்கக்கேட்டிற்குச் சில சமய நூல்கள் பரிகாரங்கள் கூறுகின்றன. அவை, தவறிழைத்தவர்கள் அச்செயல் குறித்து மனமார வருந்துவதும், அதனைச் சமயத் தலைவர்களிடம் அறிவித்து விடுவதுமாம், ஆனால் இப்பரிகார முறைகள் பகுத்தறிவுக்கும் பரிணாம விதிக்கும் (Law of evolution) பொருந்தாதவையாம். ஒரு தீயசெயல் அதனைச் செய்தவனுக்கும் செய்யப்பட்டவர்களுக்கும் தீய பயனை விளைத்தே விடுகிறது. இதுவே காரண காரியவிதி (cause and effect) எனப்படுவது. இது மாற்றமுடியாத ஒரு நியதியாகும். ஒருகால் இதனை மாற்ற முடிந்தாலும் அது பல நற்கருமங்களைச் செய்வதன் மூலமாகத்தான் ஆகவேண்டும்.

### ஒழுக்கத்தின் உயர்ந்த நிலை

ஒழுக்க வாழ்வின் உயர்ந்த நிலை யாதெனின் நல்லொழுக்கத்தை உவப்பதும் தீயொழுக்கத்தை வெறுப்பதும் ஆகிய பண்புகளை மக்கள் தம் இயற்கை உணர்வால் அடையப்பெறுவதேயாம். தலைமுறை தலைமுறையாக சமூகக் கட்டுப்பாடுகளுக்கு மதிப்பு வைத்து ஒழுகுவதாகும் குழந்தைப் பருவமுதற் கொண்டே பல்லாண்டுகள் ஒழுக்க நெறிகளில் பயிற்சி பெறுவதாலும் அந்நிலையை நாம் அடைதல் கூடும்.

## நிலைய மாற்றம்

J. இலக்கும்புற L. D. S Ben தமது பல் வைத்தியத் தொழிலை யாழ்ப்பாணம் 1-ம் குறுக்குத்தெரு 37-ம் இலக்க நிலையத்திலே தொடங்கியிருக்கின்றார்.

M 177 28, 5, 12, 19, 26

## சித்தங்கேணி - வட்டுக்கோட்டை கிராம முன்னேற்றச் சங்க நிலையங்கள்

சித்தங்கேணி–வட்டுக்கோட்டை கிழக்குக் கிராம முன்னேற்றச் சனசமூக நிலையங்களும் வாசிகசாலையும் அமைக்கும்பொருட்டு கணேச வித்தியாசாலையிலே திரு. M கனகசபாபதி அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் குறித்த சபையைச் சித்தங்கேணியிலே நிறுவுமாறு தீர்மானிக்கப் பெற்றது.

பின்வருவோர் உத்தியோகஸ்தராய் ஏகமனதுடன் தெரிவு செய்யப் பெற்றனர்.

தலைவர் திரு. M. கனகசபாபதி
உபதலைவர்முதலியார் S. குமாரசாமி
திரு. P. கணபதிப்பிள்ளை
,, T. இராசசுந்தரம்
,, M. K. சுப்பிரமணியம்
,, S வேலுப்பிள்ளை

பொதுக் காரியதரிசி திரு. M. S கந்தையா நூல்நிலைய வாசிகசாலைக் காரியதரிசி திரு R.M. வைத்தீஸ்வரன் விளையாட்டுப் பகுதிக் காரியதரிசி திரு. C. சிவப்பிரகாசம்.

சமூகமளித்தோர் ரூபா. 2000 சபைக்குதவத் தாமாகவே முன்வந்தனர். உள்நாட்டிலும் பிறநாட்டிலும் பணந் திரட்டவேண்டுமென்று ஏகமனதுடன் தீர்மானிக்கப் பெற்றது.

## தாய் மொழியிலே கல்வி பயிற்றுங்கள்!

### வியாவிற் சைவபரிபாலன வித்தியாலய ஆண்டுவிழா

நிகழும் நந்தன ஆண்டு மார்கழி மீ ௪ உ (19-12-52) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய ஆண்டுவிழா கொண்டாட்டத்தில் தலைமைவகித்த பண்டிதர் சு, இராமசாமி அவர்கள், தாய்மொழிமூலம் பிள்ளைகள் கல்வி பயில்வதனால் மாணவர்களின் கல்வி இலகுவாக விருத்தியடையுமெனவும், பெற்றோருக்கும் கல்விச்செலவு பிள்ளைகளுக்குச் செலவாகும் பணத்தொகை குறையுமெனவும், எந்த இடத்திற் படித்தாலும் பிள்ளைகள் ஒரே திட்டத்திற்கமைவான கல்வியையே கற்கிறார்களெனவும், இலங்கையும், அயல்நாடாகிய இந்தியாவும் இந்நன்மையை ஆராய்ந்தே சுயபாஷைமூலம் கல்விகற்க ஆரம்பித்திருப்பது மகிழ்வடையத்தக்கதெனவும், ஆதலால் எங்கள் சுயபாஷைப் பாடசாலைகள் புது மலர்ச்சியடைந்துவருவது உற்சாகமடையத் தக்கதென்றும், அடுத்த வருடமாகிய 1953 ம் ஆண்டிலே ஆண்டில் தமிழ் சிங்களப் பாடசாலைகளில் அப் பாஷைகளை ஆறும் வகுப்பு ஈறாகவுள்ள சகல வகுப்புகளிலும் கற்பிக்க வேண்டுமென அரசாங்கம் ஒழுங்குசெய்திருப்பது போற்றப்படத் தக்கதெனவும் ஆகையால், எங்கள் தமிழ் வித்தியாசாலைகளை நல்லமுறையில் கல்வி கற்பித்து, ஆங்கில வித்தியாசாலைகளிலும் சிறந்த அந்தஸ்தைப் பெறுவதற்குப் பெற்றோரும் ஆசிரியரும் ஆதரிக்கவேண்டுமெனவும் வற்புறுத்திப் பேசினார்கள்.


திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான ருணிமார்க் ஓடுகள் $13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணம் ஐக்கியபந்தி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமயமும் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியசோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறாப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.



நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
இரத்தவிருத்தியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகரானமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார பலமும், பசியும், இரத்த விருத்தியும் உண்டாக்கும்.
இல்வாழ்க்கையில் அதிஅற்புத சுகந்தரும்.
நீரழிவு, பவுத்திரம், மூலம், குன்மம், இடுப்புவலி,
வாய்வு, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 25—0—0

குரு பஸ்பம் (தொய்வுக்கு)
தொய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு
தொண்டைவலி, க்ஷயம முதலிய சகல வியாதிகளையும் நீக்கும்.
அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனம்)

M. 16. 25-4-52—25-10-52.



L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



இலங்கையின்
மிகப் பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday December 26 1952

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org